உ
சிவமயம்
திருமுருகன் துணை

நல்லை ஆதீனத்தின்
அன்பளிப்பு



ஈழத்தமிழகம் யாழ்நல்லூர்

# முருகப்பெருமான் திருவந்தாதியும் இன்தமிழ்த் தோத்திரப் பாடல்களும்

வெளியீடு:
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
நல்லூர்
யாழ்ப்பாணம், தமிழீழம்.

விலை: ரூபா 25/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஈழத்தமிழகம் யாழ்நல்லூர்

# முருகப்பெருமான்மேல் பாடிய திருவந்தாதியும் இன்தமிழ்த் தோத்திரப் பாடல்களும்



ஆக்கியோன்

அளவையூர் சைவப்புலவர்

## வித்துவான் சி நா. கணேசபண்டிதன் B. O. L.

சித்தவைத்திய கலாநிதி, சமாதான நீதிமான்

கணநாதவாரிதி

பவ ௵ ஆவணி ௴ 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருமுருகன் துணை



ஈழத்தமிழகம் யாழ்நல்லூர்

# முருகப்பெருமான் திருவந்தாதியும் இன்தமிழ்த் தோத்திரப் பாடல்களும்

★

வெளியீடு:
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
நல்லூர்
யாழ்ப்பாணம், தமிழீழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர், ஸ்தாபகர்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம் - ஆதீன முதல்வர்

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

பருத்தித்துறை வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம், ஈழத்தமிழகம்.

# அணிந்துரை

சைவ நெறியோடும் செம்மனச் செல்வர்களே!

நல்லூர் முருகன் திருவந்தாதி வெண்பாப் பாடல்களும், தோத்திரப் பாடல்களும், என்னும் நூலின் பிரதியைப் படித்தோம், பெரும் மகிழ்வுற்றோம். உண்மையில் அளவையூர் உயர்திரு. வித்துவான் சி. நா. கணேசபண்டிதனார் அவர்கள் நற்றமிழ் வல்லுனர், நல்ல கவிஞர், என்பன வெள்ளிடைமலை. முருகப் பெருமானின் புகழ் பெருமைகளை ஆழ்ந்தறியப் பல நூல்களைக் கற்க வேண்டும் அந்த வகையில் பண்டிதரீ அவர்களின் பாக்கள் நிறைவான பக்தி மிளிரவும், சொல்வன்மை. பொருள்நயம், கற்பனை அலங்காரம், சந்த இன்பம் முதலியன அமைந்திருப்பது வியத்தற்குரியது. முருகப் பெருமானின் திருவருள் இல்லையேல் இவை வசப்புறாது.

முருக பக்தர்களுக்கு இந்நூல் நல்லதொரு விருந்தாகும். ஒருமையுடனும், திரிகரண சுத்தியுடனும் பாடி, முருகப் பெருமானின் திருவருளை நிச்சயம் பெறலாம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்
07-06-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழப் பிரதேசச் செயலாளரும், பலசிறுகதை பெரு நாவல் தமிழ் நூல்களை ஆக்கியோனும், முதுபெரும் எழுத்தாளருமாகிய

**கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) M. A.**

அளித்த

# விதந்துரை

அளவைப் புலவர் வித்துவான் சி. நா. கணேசபண்டிதனாரின் நல்லூர் முருகன் தோத்திரமாலையைப் படித்தபோது என் மனதில் இருவிதவுணர்வுகள் ஏற்பட்டதை உணர முடிந்தது. ஒன்று, ஆக்கவிலக்கியத்திற்கு அழகும் வலிமையும் சேர்க்கும் கவிதைகளைப் படித்த உணர்வு. இரண்டாவது, நெருக்குதலும் இறுக்கமும் கொண்ட இன்றைய வாழ்வின் அழுத்தத்திலிருந்து விடுபட மனதில் எழும் இலேசான உணர்வு.

உண்மையில் நல்ல படைப்பின் சமூகப் பயன்கள் இவையே. கணேசபண்டிதனார் இத்துறையில் ஏற்கெனவே பல கவிதாஞ்சலிகளை ஆக்கியுள்ளார். விநாயகப்பத்து, ஒருபா ஒருபது, பஞ்சரத்தினமாலை, விநாகபரத்துவ விளக்கம், நயினை நாகபூசணி தோத்திரமாலை அம்பாள் என்ற அன்னாரின் கவிதை வரிசையில் நல்லூர் முருகன் மீது பாடியிருக்கும் இப்பாட்டுக்களுமமைகின்றன. அவரது கவிதைகள் சொல்லோட்டமும் அலங்காரப் பக்திச் சுவைகளும் ஆற்றொழுக்கான தெல்லியூர் துர்க்கையம்மன் திருத்தைக்கவந்தாதியும் கொட்டி நனைக்கின்றன.

இக்கவிதாஞ்சலியில் இடம் பெற்றிருக்கும் நல்லூர்கோயிற் திருப்பதிகங்கள் பக்திச்சுவை நிறைந்தவை. புலவர்கணேசபண்டிதனாரின் கவிதைத் திறனையும் சொல்நயத்தையும் இப்பதிகங்களில் காணமுடிகிறது. ஆழ் மனதிலிருந்து மெய்மையின் வெளிப்பாடாக வெளிவரும் இப்பதிகங்கள் உள்ளத்தை உருக்கும் ஆற்றலுள்ளவை. திருவந்தாதி பண்டிதனாரின் வித்துவத் திறனைக் காட்டுகின்றது. கீர்த்தனைகளை இசைஞானத்தோடு பாடும் பொழுது பண்டிதனாரின் இசைத்தமிழினிமை புரிந்து கொள்ள முடிகிறது.

கணேசபண்டிதனாருக்கு வயது 84 என அறியும் போது அவர் தோற்றத்தின் இளமை வியக்கற்பாலது. இறைவனைப் பாடும் பணியிலுள்ள பெரியவர்கள், முதுமையும் தளரா எழிலும் முகத்தில் எதற்கும் அஞ்சாமையும் குடிகொண்டவர்கள் என்பதற்குப் பண்டிதனார் ஒரு சான்று.

இறைவன் அன்னாருக்கு நீண்ட ஆரோக்கியத்தையும், தொடர்ந்தும் அவன் புகழ் பாடிப் போற்றும் ஆற்றலையும், அளிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பிரதேசச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
10-06-94.

கலாநிதி க. குணராசா
(செங்கை ஆழியான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் நுதற் பொருள்

—o

செந்தமிழ் கொட்டிய அந்தமில் அதிபதி
பந்தமில் தென்னா டுடையவர் சிவனென
அருமறை துணிந்த பொருளது தமிழர்
கருவினி லூறிடும் கடவுட் தேறலாம்
செந்தமிழ் மொழியெனும் அந்தமில் சுவையை
அமிழ்தினு மினிதென அள்ளிப் பருகிய
குருகுறு முனிமுதல் கொண்டசெந் தமிழ்த்தாய்
திருவடி தொழுவார் தீப்பா டுடையரோ?
பலநல னூறிஇய பங்குகொள் ஞானராய்க்
குண நலங் கண்டு குணக்குன் றேறிய
மலர்தலை யுலகத்து மாண்பு மறையுமோ

அதனால்—

மாதவன் பதமடைந் திவ்வைய மிசைந்திடு
மாதமிழ்த் தெய்வம் மலர்ந்ததென் னைத்தே
மாமுகப் பிரானையும் மருவு செந்தமிழ்
தாங்கிய முருகனைத் தங்கு நல் லூரில்
காவிய மாக்கித் தருகிறேன் தமியேன்
தேடருஞ் சீருறு வீடருள் கந்தனைப்
பாடுவ தென்பதிப் பசலிக் காகுமோ
விரிதமிழ் மறையினைப் பரவ வளர்ப்பது
சரிவர வரம்பு கட்டுவோர்க் கல்லது
முன்னருள் பெறாதஇவ் எளியனேற் கேது

ஆயினும்—

முன்வினைப் பயனால் முகிழ்ந்த செந்தமிழ்
என்தீவினைப் பயன் எடுத்தெறி வதற்காய்
நல்லூர்க் கந்தனை நன்மனத் திருத்தி
பொல்லா வினைகளைப் புகுத்திடா காக்கெனப்
பல பாடல்களைப் பாடினேன் படைத்தேன்
இயற்பா மூலம் திருவந் தாதியும்
பயன் படுமூலம் பலவர்க்கப் பாக்களும்
ஆக்கி யதனை யருள்நோக் குடையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினில் விட்டேன் நோதலிலையெனச்
சாற்றினர் மேன்மக்கள் சாற்றுதல் இனிதே

இனித்த பாக்களை

பொற்கலத் தமுதென போற்றிப் புகழ்ந்த
நற்குல ஞானரின் நவிலுரை முன்னே
பின்னே யடியேன் பிதற்றிய பூம்பொழில்
மின்னே யெனஒளி மேவிய குமரனின்
பொன்னேர் மேனியைப் பூக்குட லரக்கி
தூய நல்லூரிற் துளிர்த்த செம்மையை
துரிதமா யோதுதல் சொற்பொருள் நீடா
பற்றிய பாசப் பந்தப் பிணைப்பால்
சொற்றுணை அடியான் சுட்டபொன் மொழியால்
கற்றவர் உற்றுறச் சொற்றினன் தமிழே

தமிழே! தாயே!

தலை கொடுத்துன்னை தாங்கினான் தமிழ்மன்
விலையிலா துன்னை வேண்டினர் வேற்றவர்
தொண்டர் நாதனைத் தூதுசெல் விடுத்தாய்
உண்ட பாலனை முதலைவாய் எடுத்தாய்
கண்ட எலும்பினைப் பெண்உரு வாக்கினாய்
பண்டை மறைகளைப் பூட்டிய கதவினை
விண்டுன் பாசுரம் விளம்பத் திறந்தாய்
அண்ட உலகின் அருட்டிரு முனிகள்
வேண்டி நிறகவும் வேண்டாக் குதம்பையாய்
குண்ட குறுமுனிக்குக் கும்பியாய் குவிந்தாய்

இன்று நல்லூரில் அன்னையே!

ஆறு முகனின் அருள்பொழி மொழியாய்ப்
பாடு கிடப்பவர் பாசுர மொழியாய்
தேடி வருபவர் தீந்தமிழ் மொழியாய்
ஓடி யோடி நூல்வழி ஓடுறாய்
என்னே! வியப்பு என்னே! ஆட்சி
தமிழ்சங் கமுருகன் தனிவே லேந்தி
தமிழ் தெனக்காணும் அருள்மங் கையருடன்
மங்குல் படுமாடம் மதியடி மாளிகை
எங்கும் பெருவீதி எழில்பதி சுனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கு நவரத்தின கூடம் விதானம்
சந்து புகுத்திய சாளரம் தூபம்
இந்திர நகரென எடுத்தாள் பதியில்
நிற்பவன் முருகனை நினைத்தவன் கணேசன்
பொற்பணி பாக்களால் போற்றிப் பணிய
ஏற்புடைத் தோவென எண்ணினேன் வியப்பே
அன்பினால் அறிவினா லருளினால் அமைந்த
இன்பப் பாக்களை இனித்த எம் முருகன்
பனித்த பாதங்களில் படைக்கின்றேன் ஏற்க!
முன்செய் வினையொன்று முளைத்த ததுவே
பின்செய் வினையினைப் பிடரியிற் றள்ளி
அள்ளிவை யவற்கொரு ஆகுதிப் பாவெனத்
தெள்ளிய மனோவலி தெளிந்து வைத்திட
ஆக்கினேன் அந்தாதி அருள் திருப் பாக்களும்
கட்டினேன் மாலை கந்தனி ஐயற்கே
விளக்கினுள் எரிதிரி விடும் புகைக் கொழுந்து
அளக்க முடியாத ஆதங்க மூட்டினும்
அருள் விளக் கொளியை யணைப்பரோ வித்தகர்
புகையை மறந்து புத்தொளி விளக்கைத்
தகையென எண்ணித் தாங்குவர் புலவோர்
இருளை நீக்குவது எழில்விளக் கொளியே
மருளை நீக்குவது மறைமொழி விளக்கே
இனித்த பாக்களை ஏற்பவன் முருகன்
பனித்த பாக்களைப் படிப்பவர் அடியார்
அணிந்துரை சிறப்புரை அருளிய செல்வர்க்கும்
அச்சு வாகனம் ஏற்றிய அறிஞர்க்கும்
நயப்புரை வியப்புரை நாட்டிய நண்பர்க்கும்
கயப்புணர் வில்லாக் கலைஞர்கள் பலர்க்கும்
ஆதீனந் தரும் அருட்டிரு ஞானிக்கும்
அடியேன் வணக்கம் அருளுடன் நிறைக

அதனால்

மிடிமை நீங்கி மெய்ப்பொருள்
கடிதினிற் காண்குவர் கருணைக் கடியரே
என்றும் மறந்தறியே னென்நெஞ்சத் தேவைத்து
நின்று மிருந்தும் நெடுவேலை மன்றதிரு
நல்லையிலே கண்டு நாவுக்கரு ளேற்றி
நல்லையிலே பெற்றேன் நயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க்கந்தன் கீர்த்தனைகள்

—o—

### பல்லவி

1. ஈழநல்லூர் கந்தனை நினைமனமே — அமரன்
ஈழத்துச் சோதியைப் பணிதினமே — ஈழநல்லூர்

### அனுபல்லவி

அலைத்திடும் வல்வினையை அறுத்திடுவான் — அவன்
அருள் கண்டால் தீவினைகள் அடங்கிவிடுமே — ஈழநல்லூர்

### சரணம்

1. தேவர் இடரறுத்த தேவனேயெம் — அடியார்
தேடிவந்து பணிபுரியும் தேவபாலனே — நல்லவள்ளி
நாதனே
ஆடுமயிலேறி மங்கையிருவர் பக்கமாய்
அணைந்து நின்றே காட்சிதரும் அத்தன்மகனே
— ஈழநல்லூர்

2. தென்ளு தமிழ் மொழியால் வைதாரையும் அணைக்கும்
திருவருண கிரிசெப்பிய வாக்கை யெண்ணி
மோனநிலை நின்றஞான செல்லப்பர், யோகர்
ஆனதவ முனிகட் கருளீந்த சிவகுருவாம் — ஈழநல்லூர்

### பல்லவி

2. இன்னும் இரக்கமில்லயோ என்நல்லை முருகா — இந்த
ஏழையின் வேதனை தீர்த்தற்கு வழிசெய — இன்னும்

### அனுபல்லவி

நத்தித் திரியுமிந்தப் பத்தியில்லாப் பாவியேன்
வத்தித் துடல்சுருங்கிப் பித்தப் பிணிக்குகையாய்
நித்தம் நடைப்பிணமாய் சத்தியில்லாமல் இப்போ
வந்தேனுன் திருவடிக்கே வல்லமை போனபின்பே — இன்னும்

### சரணம்

1. சரவண பவாவெனும் சடாச்சர மேழையும்
அரகர சொல்லாமல் அநுதினம் கெட்டேனே
சூரிய வொளிபோல ஞானச்சுட ரொளியால்
பாவி யெனைக் கருக்கிப் பவக்கடல் மூழ்கவிடா - தின்னும்

2. பிறவிப் பவக்கடல் வேண்டாமையா இனி
பெற்ற துன்பங்கள் போதுமையா வினையேன்
அன்னையும் அப்பனும் நீயென ஆண்டருள்வாய்
பின்னை வரும் வினைகள் வேதனை செய்யா வெனக்கு
— இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் முருகன் திருப்பதிகப் பாமாலை

—o—

1. பத்தியா யுனதடியார் பேரருளை வாய்மடுத்துப்
பருகுதொறும் பருகுதொறும் தித்திக்கு மமுதமென
நித்தியமாய்ப் பஞ்சமலர் நீவிநிழல் திருப்பாதம்
சத்தியமாய்க் கைபிடிப்பச் சார்ந்தவனே சங்கத்தமிழ்
வித்தியனே விளங்குதெய்வ வேதியனே எங்கள்வினை
தீர்த்தருளும் வேலவனே விண்ணுலகும் மண்ணுலகும்
சித்தனெனத் தேவருறை திருபூத்த நல்லூரில்
முத்திதர வந்தவனே முழுமுதலே முருகையா.

2. கந்தா முருகா கலியுகத்தின் கலைக் கடலே
நந்தா விளக்கே நானிலத்தின் நாயகனே
சிந்தா குலத்திலெனைச் சிரசக்க நல்லூரில்
வந்தாள் வாவென்று வரங்கிடத்தேன் வடிவேலோய்

3. காமன் கணைக்காளாய்க் கானகத்துக் குறமாதைக்
காதலித்த கருணை வீரா
கனிந்தமொழி வள்ளியை இச்சைக் கினியவளாய்
கானமர் சத்தி யாக்கி
நாமமா யிரங்கொண்ட நல்லசிவ னிளமதலை
நல்லூரில் இல்லை மைத்து
நாவலர், யோகர், செல்லப்பர் ஞானிகள்
நாற்றிசையுங் காவல் செய்ய
நாமமணி கடம்பனே தரணியோர்க் கருள்புரிய
தனிவேல் கைக்கொண்ட தவனே
தவமறியாச் சூரனைத் தண்டித்துன் கொடியேற்றி
தவழுகின்ற மயிலு மாக்கி
வாமனா முனதண்ணன் வழங்கிய திருவருளால்
வள்ளியை வேட்டு வந்து
வரிசையாய் வருமடியார் திருவருளைப் பெற்றுய்ய
வந்தமர்ந் தாய்வடி வேலனே

4. பூகமும் தென்னையும் பொற்கொன்றை செருந்தியும்
பூமுல்லை சோலை நல்லூர்
பொங்கிவரு மக்களின் ஆராதனை பூசை
புனுகு வீபூதி யுடனே
பாகான சந்தனம் குங்குமஞ் சவ்வாது
பசும்பால் பனித்த இளநீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுடன் தேனும் பழரச சங்களும்
பாலித் தொழி விரையில்
பாவமுடனோதுவார் பண்முறை படித்தவிசை
பகுத்தறியு மடியார் கண்ணீர்
பாதங்களைக் கழுவிப் பனிந்துவரு மருவியில்
பல்கோடி மக்கள் தோய்ந்து
பாவங்களைக் கழுவிப் பாரிக்கு முனதருளை
பரிந்து பெறவே பாங்கில்
பாவையரோ டூர்திமயிலே றிவிளையாடிடும்
பாலனே பரதேசி மகனே.

5. களைத்தவ ரருந்நுங் கரும்பினின் சுவையே
கருபொதிச் செந்தமி ழொலியே
இளைத்தவ ராறும் இன்னிழல் தருவே
இரப்பவ ரேந்து மினியநற் கனியே
உழைப்பவர்க் குற்ற உறுதுணை யுயிரே
உண்மையர் போற்றுமுயர் நல்லூரில்
விளைந்திடு செல்வம் வளை விக்குமையனே
வித்தகனே காணவென் விழிகள் குளிர்ந்தனவே.

6. நாவலர் கண்டமன் நல்லூரில் தமிழருவி
பாவலர் நாப்பட்டுப் பரந்துகொண் டோடு குக
காவலன் முருகோன் கணிந்திருந்து களிப்படைய
தாவடிக் கொக்கேறித் தலைவியரோ டமர்ந்திருந்தான்

7. பூத்த தாமரை புனல்வழி செல்லப் புலனடக்கி
காத்த ஞானரின் கன்மம் களைந்திடு ஞானவேலன்
ஏத்து நாரியர் இருவரை இடம்வலம் வைத்தாளும்
பேற்றை நல்லூர் கண்டபின் காணவும் வேறுமுண்டோ

8. தமிழை உயிராக்கித் தத்துவத்தை உடம்பாக்கித் தரணியிந்த
அமிழ்தமே அல்லல்கெட அருளீந்த அழகேசா என்னுன்னை
இமிழ்திரை ஞாலத் தேத்த வுன்சக்திவேல் விரைந்தெழுந்
துமிழும் பேரொளி நல்லூரில் காண்பதல்லால்வேறுகாண்பதோ

9. தேவரோ டிகல் கொண்ட வஞ்சகச் சூரனை
தடிந்த வேல்கை யிருப்ப
தாவுமயி லேறிவந் தடியரின் குறைநீக்கு
தந்து வாரணக் கொடியிருப்ப
பாவஞ்செய் குண்டரின் தாக்கிறி உடல்பிளக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்த கூர்வா ளிருப்ப
சாவத்தில் ஐயிலம்பு சண்டாளரைக் குத்திச்
சல்லடைக் கண்ண ளாக்க
நாவுதோ ரிருக்கின்ற நற்கலை வாணிபுரை
நயந்தோரைஆளு முருகா
பாவினா னுன்னையே பற்றினே னடிமைகார்
பாவையாள் வள்ளி பரனே.

10. புவனியைப் படைத்த பிரமனை அடைத்துப்
புலவனுக் கருள் புரிந்தாய்
புத்தரை எதிர்த்துப் பத்தரை நிறைத்துப்
பூவிலே யின்பந் தந்தாய்
சிவநெறி தூற்றிய சமணரை வதைத்துச்
செந்நெறி காண வைத்தாய்
சித்தங் களிகூர்ந்த செம்மனச் செல்வியின்
செந்தமிழ் கேட்டு வந்தாய்
தவநெறி தாங்கிய தலைச்சங்கப் புலவர்க்குத்
தலைவ னாயமர்ந் திருந்தாய்
தரணியில் நீயாற்றும் தக்கோல நடனங்கள்
தரம்பேசிக் காண முடியுமோ
அவமான வாழ்வினில் சுகபோகந் தேடிடும்
அற்பரைய டக்கு மையனே
அண்ட சராசர மொடுங்கவாழ் நல்லூரில்
அடிவைத்த ஞான குருவே.

11. வேதநெறி பிறழா விண்ணவர்கள் போற்றும்
வித்தகா சத்தி மகனே
நாதமொடு விந்துவுரு நவபாசாணத்தில்
நனைந்திட்ட தங்கச் சிலையே
பாதம் பதித்திட்ட பழநியோ அல்லது
பாகரந் கேட்ட நல்லையோ
காதிரண் டடங்காது தமிழோசை கேட்கவோ
பன்னிரு காது கொண்டாய்
ஆதியே அசுரக் கொடுமைகளை அழித்திடும்
அயில்வேற் கைமுரு கையனே.
சோதியாய் உலகாளும் திரிபுராந்தக குமாரா
சொர்ண வடிவான குகனே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. நாடினேன் நலிந்துன் திருவடி மனத்துள்
நாட்டியென் இடும்பைகள் அகல
தேடினேன் தேடி ஒளியகல் நயனம்
திகைத்தபின் செய்வதேதென அறியாப்
பாடினேன் பாட்டினுள் பரந்தவன் குடிபுகு
பண்பெருகு நல்லூர்ப் பதியில்
ஆடினேன் அழுதேன் அரற்றினேன் கண்டேன்
அப்பா முருகாவெனுநாமம்.

13. அருள்தருங் கடலே ஆனந்த வெள்ளமே
அருகிருந் தறிவு மாற்றி
பெருந்தமிழ் தோய்ந்த கலைக்கடல் நாவலன்
பிறந்த நல்லூ ரெனும்பதி
அருக்கன் அலர்த்திய அணிதிகழ் மலர்க்குவை
அளிக்கண முழச்சிந்தும் தேன்துளி
விருப்புறு வீதியெங்கணும் விரிய விளைந்தது
அப்பா முருகாவெனுநாமம்.

14 கற்றிலேன் ஏதுங்கலைகளு மறியேன் கனல்தரு
புலன்வழி மயங்கி நின்றேதும்
உற்றிலேன் பேதையேன் மனம்புகு பாதையி
லுழன்று நிலைதடு மாறி
வற்றலா யுடல்பாறி உழுத்து நோய் வாட்டி
வதைசெய வாற்றாமையினால்
பற்றினேன் நற்றுணை இதுவெனக் காட்டும்
முருகாவெனுந்திரு நாமம்.

15. மஞ்சுலாமதில் மாடமும் மாநீர்ப் பொய்கையும்
மயங்கு மங்கையர் பூசெறி சோலையும்
அஞ்ச விலையென வஞ்சியர் ஓதிடும்
அரியநற் பாசுர மாலை யுஞ்செறி
நஞ்ச கட்டிய கண்டனின் குமரன்
நம்வினைக் கருள்செயு மாதிநல் லூரினில்
மிஞ்சுமா வருள்பெற வடியார் கூவிடும்
வினையழி திருமுருகா வெனுநாமம்.

16. அறந்திகழு மன்புடனே யறிவு மாற்றி
அலைபுலன்கள் வழிப்படுத்தி இடரும் நீக்கி
மறப்பிலா முப்பொழுது மேத்தி நல்லை
மாநகருள் குடிவாழும் மாயூ ரானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பினும் தொழுதொண்டர் தொண்ட னான
இற்றைவரை அறியா தஈன நாயேன்
நிறமுருளும் இருமங்கை நடுவில் காணக்கண்
நீர்மல்க உளமுருகு நாளென் நாளோ.

தூராத நிறையன்பு கொண்ட தொண்டர்
துதித்துவரு மடியார்நின் திருப்புக ழும்பாடி
ஆராத மனங்குழைந்து அழுத கண்ணீர்
அழகுதவழ் நல்லூரில் ஆறாய் ஓடி
சீரான வள்ளிதெய்வ யானை பக்கம்
திகழு திருவரங்கன் மருகன் பாதம்
பேராழி ஆகிநிற்கும் பேற்றைக் காணப்
பெருமானின் அடிவருடும் நாளென் நாளோ.

## முருகா வாழி

பொன்பூத்த இமயப் பொருப்பரசி தருமதலை
பொங்கு தமிழுணர்ந்த வடிவே
போதமெய் ஞானவழி காட்டிடும் புலவனே
புங்கவர்க்கோம் பொருளீந்த புதனே
வன்பூத்த சத்திவேல் கரங்கொண்ட வேலனே
வல்லவுணர் உரங்கிழித்த வாலனே
வாதாடக் கிழவியை வழக்குக் கிழுத்தவளை
வம்பு தமிழ்கேட்ட வரனே
மின்பூத்த கொடியிடையாள் வள்ளிமண வாளனே
மேவுசெந் தமிழ்ப்புலவர் மெச்சுபுலமே
மென்னடிகள் கழல்நாதம் கேட்டு மெய்யடியார்கள்
மிடிபோக்கு ஞான நிதியே
தென்பூத்த நினதுஇணை பதமலர் இறைஞ்சுவார்
சிந்தித்த வரங்கள் அருள்வாய்
தேவனே நல்லையிற் குடியமர் முருகனே
தீபசடாச் சரனே வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணனனை செங்கமலப் போதுநிக ரறுமுகமும்
அணையாத நாட்டம் நால்மூன்றும்
அமரரிடர் திரவிளை யாடுகர மீராறும்
அருளிக்கு வெற்றி வேலும்
கருணைகொள் ளிரு குமர்கள் கனிவு மொழிபேசிடக்
கவினா டுமிரு பசகமும்
கலைசெறியுஞ் செந்தமிழ் விழுங்கிய மகிழ்வினால்
காளமயிலேறி யாட
வருண வைடூரியம் மரகத முத்துமணி
வளைந்து மும்மார் பிலங்க
வனபத்திர பூங்சோலை உள்ளோடித் தொண்டர்
வரங்கேட்டு வளைந்து நிற்ப
தருணமென வமரர்பணி திருநல்லை குடியகன
தயாபரன் குமரன் வாழி!
துங்கி மலபரிபா கஞ்செய்திடு மடியாருந்
தவமுத்தர் பலரும் வாழி!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் முருகன் கோயிற் திருப்பதிகம்

—o—

1. ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் தன்னை
ஓராறு சென்னிமிளிர் உடையான் தன்னை
பாங்காரும் படர்சிறைய புள்ளி னானை
பார்வதியின் மடிமிசை யிலூர்ந்தான் தன்னை
தேங்காருங் குழம்பொழுகும் தொடை யினானை
தேவர்கோன் புதல்விபுணர் செம்மான் தன்னை
ஈங்காரத் தொனிசெய்யும் பொழில்நின் றானை
எழில்மிக்க நல்லையிற் கண்டேத்து கேனே.

2. பன்னிரண்டு கையுடைய பாலன் தன்னை
பாவைக் கருள்சுரந்த பகவான் தன்னை
மின்கொடியா ரிருமருங்கும் மிளிர்வான் தன்னை
மேலுலவு ஞாயிற்றின் மேனி யானை
பொன்னிரண்டு பாதமலர் காட்டி னானை
பொங்கரவஞ் சூடினார்க்குக் குருவா னானை
மன்னுபுகழ் பெருகிவளர் நிலத்தி னானை
மாசற்ற நல்லூர் கண்டேத்து கேனே.

3. பஞ்சபுல னொடுங்க நின்றருள்வான் தன்னை
பாசுரத்தி னிசையினுள் படிந்தான் தன்னை
வஞ்சவுணர் பொடிபடவே வீழ்த்தி னானை
வாராத செல்வமெல்லாம் வருவிப் பானை
கஞ்சமலர்ச் சேவடியைக் கழுவுந் தொண்டன்
கணேசனார் பாட்டில் நின்றா டுவானை
விஞ்சுபுகழ் மிஞ்சிநிற்கும் வேலோன் தன்னை
விரவிவரு நல்லூர் கண்டேத்து கேனே.

4. கார்படியும் கடல்சூழ்ந்த செந்தி லானை
கலை முதிரும் பழமுதிர்சோ லையினானை
சீர்பொதிந்த திருப்பரங் குன்றுச்சி யானைச்
செப்பரிய ஔவைமனம் குடிகொண் டானை
போரணவு வாரணமே கொடியாய்க் கொண்டு
புகழ்பெருகு மேரகத்துட் புகுவான் தன்னை
ஏரணவும் வேங்கடமே உறையு ளாகி
எழுந்தவனை நல்லூர் கண்டேத்து கேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இலங்கு வெண்பிறை சூடுமீச னாரின்
இனியநுதல் விழிப்பொறியில் தோற்றி னானை
வலக்கையில் வேலேந்தும் வள்ளல் தன்னை
வானவர்கள் குறைதீர வேல்விட் டானை
இலங்கையர்கோன் தோளறுத்த இராம னார்க்கு
இனியநல் மருமானா யினைந்தான் தன்னை
கலைவளரும் யாழ்ப்பாணம் மருவி நின்ற
கருவூராம் நல்லூர் கண்டேத்து கேனே.

6. ஞானமே வடிவாகிப் பழனி சென்ற
நாயகனாய் நல்லூரிற் படிந்தான் தன்னை
வானமே புகழோங்க நின்றான் தன்னை
வள்ளிதனக் கின்பசுக மீந்தான் தன்னை
கானமுறு கடம்பமலர் அணிந்தான் தன்னை
கானவர் கோன்முன் வேங்கை ஆயினானை
ஈனமுற்ற தேவர்கட் கிரங்கி னானை
இனித்தவனை நல்லூர் கண்டேத்து கேனே.

7. தேவருறை சிரலைவா யமர்ந்தான் தன்னை
தேவர்பணி யாற்றமனம் மகிழ்ந்தான் தன்னை
பூவையர்கள் சன்னிதியிற் புகுவோன் தன்னை
பூமலரும் மாவிட்ட புரம் கண்டானை
ஏவர்க்கும் இன்னரு ளைப்பாவிப் பானை
ஏர்கொழுவும் ஆவினன் குடிநின் றானை
சேவற் கொடியுயர்த்தும் செவ்வேள் தன்னை
சேயோனாய் நல்லூர் கண்டேத்து கேனே.

8. அண்டமுதற் சராசரங்கள் ஆனான் தன்னை
அருந்தமிழாஞ் செந்தமிழில் அடங்கினானை
புண்டரிக வதனத்தாள் வள்ளி தன்னை
பூலோக மறியமணை ஏற்றான் தன்னை
விண்ணாதி பூதமெல்லாம் விரிந்தான் தன்னை
விரவேல் கொடுமலையை உடைத்தான் தன்னை
கண்ணுக்குள் மணியாகி நின்றான் தன்னை
கார்தழுவு நல்லூர்கண் டேத்து கேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வல்லசுரர் உயிர்போக்கி மாவைக் கீண்டி
வானவர்கள் சிறைவிடுப்ப வாழ்த்தி னானை
சொல்லுதிருப் பரங்குன்றில் சுரர்கள் போற்றச்
சுந்தரியைச் சௌந்தரியைத் தொட்டான் தன்னை
பல்புகழ்சேர் குட்டைமுனி பரிந்து வேண்ட
பைந்தமிழுக் கிலக்கணம் பகன்றான் தன்னை
எல்லையில்லா உருமாறும் வேலன் தன்னை
எழிலாரும் நல்லையிற் கண்டேத்து கேனே.

10 சுட்டபழ மீந்துதமிழ் கேட்டான் தன்னை
சுடலையிலே ஆடிநின்றான் மைந்தன் தன்னை
வட்டிவிலே பால்சுரக்க உண்டான் தன்னை
வாதாடும் நக்கீரற் கருள் செய்தானை
நிட்டையிலே பரமற்குக் குருவா னானை
நிலைதவறு மயன்தனலயில் குட்டி னானை
இட்டமுடன் அன்பர்மனம் இருள் சேராது
இலங்கு நல்லூர்பதி கண்டேத்து கேனே;

உ

# நல்லூர் முருகன் தாண்டக தோத்திரமாலை

—o—

1. மின்காட்டுங் கொடியிடையாள் வள்ளிக்கென் றும்விருப்—
பொருப்புருவு வேற்கை யோன்காண் [பவன்காண்
நன்பாட்டுக் கிழவிதமிழ் நயப்ப வேண்டி நாவல்தரு
ஏறிவிளை யாடி னோன்காண்
மென்காட்டுங் கடிக்கடம்பின் மருங்கே நின்ற மெருகுமுல்லை
கண்காட்டக் கண்டு வண்டு
தென்காட்டச் செழும்புனத்தின் யாழ்நல் லூரில்திரு
காணவ வென்சிந்தை யானே [வளிப்பான்

2. மன்னுதண் பொழிலுந் தடாகமும் மணிதூங்கு
மாடமா ளிகையமர்
தென்னவன் வளர்த்த செந்தமிழ் சொல்லிய
தேவசே னாதிபதி
கன்னிய ரிருவருடன் காதலா யமர்ந்திடு
காமருவோங் காரவடிவுள்
வன்னிமா மரந்துன்னி வீழ்த்திய வடிவேலனை
யாழ்நல்லூர்க் கண்டேனே.

3. வேதத்தை வேதத்தி னின்சுவையை விழுமிய
அடியார் விழுங்கும்
கோதிலாக் கனியைக் குன்றேறுங் குகனை
குவலயந்தொழு குமரனை
ஆதியையென் னினியவமுதை யாளுமப்பனை யொப்பிலா
மணியெ னஇரு
மாதரைச் சேர்த்திய மயூரனை மாடஞ்சூழ்
யாழ்நல்லூர்க் கண்டேனே.

4. கானமர் வள்ளியைக் காதலால் வரித்த
கருணைக்கட லமுதை
வானவர் போற்ற அவுணரை யழித்த
வண்ணச்சிவக் கொழுந்தை
தேனவிழ் செந்தமிழ் தீட்டிய புலவனைச்
சிறைமீட்ட தேவனை
மீனமர் பொய்கைசூழ றுபடைவீ டுடையானை
யாழ்நல்லூர்க் கண்டேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 பிணிவளர் குரம்பை பெரிதெனவெண்ணிப் பெருமைகள்
பலப்பல பேசி
அணிபல சூட்டி ஆர்வமோ டுணவு நிறைநிறை
யூட்டி யழுங்கும்
மணிமலர்த் தார்புனை மங்கைய ரிருவர் கைகொள
வணங்குங்ந் தங்கைவேல்
திணிதொ ளடியவர் பெருதுயர் றறுக்கும் பெருங்காவளர்
நல்லூர்வணங் குதும்நெஞ்சே.

6. வணங்கலில் சூரனுஞ் சுற்றமும் செருகளத் தவிய
வேல்விட்ட குமரன்
பிணங்குமவனை நெடுவேல் நுதிமுகங் கிழிப்பக் குக்குட
மயூர முமாகி
அணங்கி வணங்கத் துவசமு மூர்தியு மாக்கி
யருளி யங்கே
இணங்க விருந்தனன் இருவாலை களுடன் நல்லூர்
காணவாவென் மடநெஞ்சே

7. குலைதெங்கின் செங்காயும் குவிகமுகின் பாளைமுத்தும்
றாய்மிளிர எங்கும் [குவிந்தொளன்
நிலையான பகுஞ் சாலை நெடுந்தருக்கள் தருமலர்கள்
நிறைந்து நிற்கும் [மணம்வீச
மலையார்ந்த கோலஞ்சேர் மணிமாடக் கோபுரமும்
மகிழ வைக்கும் மிகமின்னி
கலையாரும் யாழ்நல்லூர்க் கந்தனைநீ முன்சென்று
வென்மட நெஞ்சே. [காணவா

8. மறையோதப் பெருவேள்வி அகில்தாரு கொழும்புகை
போய்ப்பரந்தே யெங்கும்
நிறையாரும் மணம்வீசி நீள்வானம் கருக்கொள்ள
நிழலுங் காட்டும்
பிறையாருஞ் செஞ்சடையான் பிள்ளையாய்க் குருவாகிப்
பெருமை பெற்ற
இறைவனா மாறுமுகன் நிலையான யாழ்நல்லூர்
இறைஞ்சவாவென் மடநெஞ்சே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இமயக் குமரிமகன் இளவாலையார் சேர
இயங்கிவரும் நல்லூரிலே
இதமான மல்லிகை முல்லை சம்பங்கி
இருவாட்சி செந்தாமரை
சமகமென வாசனை காற்றினில் உருண்டோடிக்
கயல்விழிமக ளிர்முடிமேல்
கரவாது மணம்வீசச் சதுரங்க வீதியில்
சரமேந்து தமளியத்தில்
வம்புபுனல் பூவினொடு செங்கனிகள் பசும்பாலும்
வளமாக அளிக்குமடியார்
தமைமறந் துணர்விழந் துருகிடும் பாவனை
தவழுமெய் மழலையைப்போல்
அமரர்கள் வினைகெடுத்த ஆண்டவப் பெருமான்
அரிமருகன் அறுமுகத்தான்
ஆடுகின்ற மயில்மீது ஆடிவருவான் காண
அடியார்கள் இடர்களையுமே.

10. அருள்தரும் செல்வம்தரும் அடியார்க்கு ஆவன
எல்லாம்தரும் படுதுயர ழிக்கும்
மருள்நெறி மயக்கம் மங்கிடும் மாண்புகழ்
பெருகும் மனைநிலம் செழிக்கும்
கருவுற்ற நாள்முதல் தம்வினை நீங்கக்
கருதுவார் இடம்படு நல்லூர்
முருகனி மௌவல் செருந்தியும் வளரும்
முன்றலில் முருகா வெனுநாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் முருகன் திருவந்தாதி

## காப்புச் செய்யுள்.

ஆனை மாமுகப் பானை வயிறனை
மோனை முத்தமிழ் மூழ்கு மையனை
ஏனைக் கருமங்கள் எடுக்கமுன் நிற்பனை
சேனை அருள்பெறத் துதித்து நின்றேனே. 1

## இயற்பா நூல்

நயங்காண ஞாலத்துயிர் காண வானில்
பயங்காணு மிருள்படாம் நீக்கி - வயநின்ற
அந்தண ராரண மோதமகிழ் வெய்யோன்
வந்தனன் காலை நல்லூர். 1

நல்லூர் முருகா நளினமுக வள்ளியுடன்
சல்லாபஞ் செய்வதநீ சரிதானோ - எல்லோரும்
பார்த்துச் சிரிக்கப் பங்குகொள் குஞ்சரியாள்
தூற்றித் திரியாளோ சொல். 2

சொல்லுந் தரமோவுன் சோர்வறிவி னாலன்றோ
எல்லையிலா மாங்கனியை இழந்திட்டாய் - மெல்ல
மயிலேறிச் சுற்றிவர முன்னருன் அண்ணன்
எலியேறிச் சுற்றினான் உலகு. 3

உலகெல்லா முன்னையுயர் வேலனென் றெண்ண
விலகில்லா வெரு கொள் வேதனையால் - அலகிலாக்
குடும்ப மலையாடைக் கச்சையுடன் ஆண்டியென
இடும்பை யடையநின்ற தேன். 4

தேங்குவளை வீசுமணந் தெருவீதி தேங்கிநிற்ப
வாங்குவளைக் கையார் வலஞ்சூழும் - பாங்கரிலே
வாலைக் குறத்தியரை வாகாகக் கையேற்கும்
மாலை நல்லூர்ப் பூங்கா வனம். 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலஞ்சூழ் குடவயின் வரன்திருக் குன்றம்
மனஞ்சார் குறமகள் வேண்ட இனங்காண்
குறவருக் கஞ்சிக் கொள்வேடநின் வடிவம்
மறவற் கழகோ மதி. 6

மதிசூடுமுமை பங்கன் மலர்ந்த திருமுருகா
சதிவேண்டி, யண்ணன் காலடியில் - மிதிவேண்டி
வள்ளிமணங் கொள்ள வாரணத்தான் செய்த
கள்ளகணஞ் சிறப்புடைத்தோ காண். 7

காணும் படிக்குக் கலைகண்ட நல்லூரை
பேணும் படிவைத்த பெருமையினால் - வாணி
செந்தமிழப் போதில்சிறை கொண்டாளாகக்
கந்தா உனக்கே களிப்பு. 8

களிப்புடைய அடியாரைக் காக்கும் கந்தவேள்
விளிப்புடனே எந்நாளும் வேல்வீசி வழிவழியே
முழுக்காடி மங்கலம் பூண்சூடி நிதமுலவ
விழுக்கா டடையுந்தீ வினை. 9.

தீப்பொறி யிற்றோன்றித் தெய்வமகள் கைசேர்ப்ப
ஆறுபொறியால் விளைந்த ஆறுமுகா - ஏறு
மயிலேறியாடும் விளை மாவீரர் நல்லூரே
அயில்வேற் கொண்டாடு மரங்கு. 10

அரங்கில் விளையாடு மம்பலவி மைந்தன்
இரங்கியருள் தருவா னெம்பிரான் சுருங்கிச்
சாதுவராய் போமின்கா ளென்றேன் சயநல்லூர்
தூதுவ ராக்குமித் துதி. 11

துதிக்கத் திருநல்லூர் பூங்கிடங்கின் தெருவீதி
மிதிக்க மலர்மணக்கும் மாகாவும் மதிக்க
நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்துவர
என்றும் கெடுமா மிடர். 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடரொழிக்க இனவண்டு கிண்டி இரையும்
மடலவிழ் சூதப்பூம் பொழிலில் - இடங் கொண்ட
இருவாலை மாதருடன் இன்பவுறங் காட்டும்
பெருமாள் முருகனுறை நல்லூர். 13

நல்லூற கயத்தில் செங்கழு நீர் மொட்டை
நல்லரவின் தலையென்று நம்பி - நுணலும்
இரவிற் பதுங்கி இருவளையு ளடங்கி
அருள்காணு முருக னகம். 14

அகத்திலும் நின்னடியே யாளு மல்லாது
இகத்திலும் நின்புகழே பாடுஞ் - சகத்திலுமுன்
பொன் மேனி காணப்பொ தியவிழும் பூப்போல
என்மேனி யாகுமே யீங்கு. 15

குணதிசையே நோக்குஞ் செங்கமல மென்னுயிரும்
கணப்பொழுதே நோக்கும் தருணனையே — நிணமொழுகச்
சூர்தடிந்த வேலோன் சுப்பிரமண் யனைநெஞ்சே
கார்பழியு நல்லூரிற் காண் 16

காப்புன்னை உள்ளக் கதிரும் கருவினைகள்
ஆப்புன்னை எண்ண அவிழ்ந்தேபோம் - மூப்புன்னை
வணங்கு வார்க்கிலை வரனே முருகையா
இணங்குவார் நல்லூர் இனி. 17

இனிநின்று துதிப்பார் தொழுவார் செந்தமிட்
கனிகொண்டு போற்ற நின்புகழை - இனங்காண
உள்ளம் மலர உணர்வு நெறிப்பட
வெள்ளம் போலருள் நல்கு. 18

நல்லவைம் பூதங்க ளைந்தினு மொன்றாகி
அல்லில் ஒளிகாட்டும் தெளிநிலவே - நல்லை
குடிகொண் டமர்ந்த குகனே சண்முகனே
வடிகொண்ட வேல் காட்ட வா. 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானாகி மண்ணாய் மறிகடலாய் தீயாய்
தேனா யமிர்தமாய்ச் செங்கரும்பாய் ஊனாய்
உயிராய் உயிரின் ஒளியாய் உறைந்த
அயில்வேற் கையாவெனை யணை 20

அணைக்க வருவான் திருமுருகன் மடநெஞ்சே
துணைக்கும் அவன்வேல் துணையாக - பணைத்துவரும்
பாவங்கள் விட்டோடப் பரிசளிப்பான் மோகத்
தாகங்க ளென்றுந்த ணிப்பான். 21

பாலும் பழமும் பன்னீரும் செவ்விளையும்
நாலுமுட னந்தாதி நான்தருவேன் - சீலமுடன்
அப்பா வுனக்கே அழகுசெந் தமிழடிமைக்
கெப்பாவமும் வாராது பார் 22

பாலுண்ணும் பைங்கிளியும் பசும்பொறி கொள்மானும்
நாலுகின்ற மஞ்ஞையுடன் நாடி - ஓடி
விளையாட முருகாவுன் வீங்குதோள் நக்கும்
சளையாத காட்சிகாண் நல்லூர். 23

நல்லூர்ப் பெருவீதி யாதினம் நற்கோட்டம்
சொல்லு தமிழ்மணக்குஞ் செஞ்சோலை வல்ல
பாவாணர் ஓதுகின்ற பண்ணோசை எங்கும்
தாவாநிறை செல்வந் தான். 24

தாழ்ந்து குறைபிரந்து தக்கவரம் வேண்டி
வாழு மடியாரை வாழ்விக்கும் - வீழ்வில்
முருகன் வேற்கையால் மூந்தைப் பழவினையை
அருக்கன்போல் காய்வா னவன். 25

அவனைக் காண் குறைநெஞ்சே அட்டவினைகளோட
அவன்கண்டா லைப்புலனு மடங்கு - அவனே
பஞ்சபூ தங்களாய்ப் பரந்திருப்பான் நல்லூரில்
அஞ்சுவ தேனீ அறி. 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிதுயில் மாயோன் மருகன் முருகன்
செறிவளைக்கை யாருடன் சேர்ந்து நெறிநின்ற
பிறவிப் பெருங்கடல் நீந்துவார் தம்மை
அறமுடனே கரைசேர்ப்பா னாங்கு. 27

ஆழியான் பாதம் பணிந்துவரு மம்பாள்
மேழியர் செல்வம் மிதக்கவே - கூழிதொல்லை
நீக்கிக் குலங்காக்கும் குமரன்வாழ் திருநல்லூர்
ஆக்கி யருள்தருமே யறிந்து. 28

அறிந்தைந்து முன்னடக்கி யாய்மலர் கொண்டேத்தி
நெறிநின்ற மனத்தராய் நின்று - அறிந்தவன்தன்
பேர்பெருமை யோதிப் பீடுநல்லூர் காண்பார்
சீர்பெருக்குங் கந்தன் கழல். 29

கழல்தொழுது கண்ணரும்பிக் கருத்தழிந்து நிற்பார்
அழல்கொண்ட நெஞ்சத் தாராயினும் - "விழலுக்
கிறைத்த நீர்" போல் வீண்போகா தாங்கே
நிறையுமாங் கந்த னருள். 30

அருள்புரி சிந்தை அடியார்மேல் வைத்துப்
பொருள் பொதிந்தபுத்தி தருவான் - இருள் கெடுத்து
நோக்கினால் நோக்கி நுண்ணொளியிற் பிடம்போட்டு
வாக்கினால் தந்தருள்வான் வரம். 31

வசையறியா நல்லூர் இசைமுகந்த செவியும்
நசையிலா விசைதெரிந்த நாவும் - திசைமுகந்த
தேவாரத் தெருவும் தேவேந்திரன் நாடாய்
பூவாரஞ் சுமக்கும் பதி. 32

பதிகண் டறிமனமே பசியமந்தை சுற்றிவர
நிதிகொண் டுயர்ந்த நெடுமாடம் - கதிவேண்டின்
பொறியைந்து முள்ளடக்கிப் போதுநீர் கையேந்தி
நெறிநிற்க நல்லூர் நினை. 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பார் நெஞ்சில் நிலையாக நிற்பானை
அணைவீ ரநுதினமும் நல்லூரில் - துணையாய்
நெஞ்சினிருள் கெடுத்து நெடியவேல் ஒளிகாட்ட
அஞ்ச வருவதொன் றில். 34

இருந்தண் கமலத் தெழில்மலரி னுள்ளே
இருபெண்கள் அள்ளி யேந்த - ஒருமுகமாய்
ஆறுமுகங் காட்டியா றாறிடங் காட்டும்
பேறுபெற நல்லூர் பிணி. 35

பிணித்த வடம்பூட்டிப் பெருந்தேர் மேலேற்றி
அணிபூண்ட அப்பன் முருகன் - பணிசெய்யும்
பக்தர்களே வாரீர் பார்தேர் வடமிழுக்கச்
சித்தர்களா வீர்நல் லூர் சிறந்து. 36

சிறந்தார்க் கெழுதுணையாஞ் செங்கண்மால் மருகன்
மறந்தாரை மானிடமாய் மதிப்பான் - மடமனமே
வந்தாரை வாழ்விக்கும் வள்ளலவனே நல்லூரான்
எந்நாளு மவனைநினைந் துருகு. 37

உளறுதன் றிறுமாந்து ஒய்யாரம் பேசித்
தளர்ந்து முதிர்வடைந்து கூனி - அளப்பரிய
பிணிகள் தலைக்கேறிப் பேயாட்டங் கொள்வார்
கணிப்பரோ கந்தன் கழல். 38

கழலொலி கந்தன் திருவடிகள் நல்லூர்
நிழல்காட்ட நீடு நினையார் - அழல்சார
அங்கமுருகி அறிவழிந்து மெய்சுருங்கிப்
பங்கப்படு வாரிவரைப் பார். 39

பார்நீருக் கடியில் பனைப்பூதம் தன்னை
கூர்வேலால் கொன்ற குமரன் - பேராகத்
திருமுரு காற்றுத் தீந்தமிழ்ப் படையை
உருகி வேண்டினனே யுவந்து. 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வாரோ உன்பெருமை உலகத்து ஊழி
உணர்வாரு முண்டே உணர்வில் - உணராப்
பித்தர்கள் போற்றிடக்கும் பித்தர்களு முண்டே
பித்தன் மதலைப் பிறப்பு. 41

புகழ்வாய் புகல்வாய்நீ பூங்கடம்புத் தொடையனை
இகழ்வாயோ ஏத்துவாய் நெஞ்சே - பெருநிலத்தில்
கல்லும் மலையும் கனைகடலும் காற்றும்
புல்லும் நெருப்பு மானான்.  42

மானக் குரம்பை யுள்புகு மலம்நீக்கி
ஞானச் சுடர்காட்டும் நல்லூரில் - மோன
நிலைகலைத்த பழனியான் நேரியர் தம்முடனே
சிலையுருவில் நிற்கின்றான் சிறந்து. 43

சிறந்தவர் சிந்திக்கும் செங்கோடன் நாமம்
மறந்தாரை மண்ணுலக மேற்குமோ - துறந்தாரின்
சிந்தனையிற் பேசும் திருவளிக்கும் சிவமளிக்கும்
பந்தமற நிற்கும் படிந்து 44

படிந்துவரு மருள் வெள்ளம் பாரோங்கு நல்லூரில்
மடிந்துவரு மிடியடியார் மனத்தில் - வடிந்து
தேரோடும் வீதித்தெரு வெங்கணும் நிறைந்து
காரோடு சேருமே கலந்து 45

கழலோன் றெடுத்துக் கடுவவுணன் தலைமேல்
சுழலும்படி விட்ட தூயோன் - அழல்கக்க
வேலெறிந்தே யசலம் வெடித்துப் பொடியாக்கும்
பாலனவன் புராணம் படி. 46

படிக்கும் பொழுது பதியமைந்த நல்லூர்
முடிக்கு மேல்கார்வந் துரிஞ்சி - வடிக்கும்
சந்தனநீ ரெங்கும் சலசலவென ஓடி
ந்தனைவ செய்வார்க்கு வளம். 47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம்பூண்ட கந்தன் கந்தப் புராணத்தை
தளங்கொண்டார் கேட்டுப் படிக்க — உளங்கொண்டார்
ஒளிகண்டு உள்ளம் உறுநோய் தவிர்ந்து
பழிநீக்கி வாழுவார் பணிந்து. 48

பண்டைப் பெரும்பதியை நோக்கிப் பழிவாவம்
மண்டும்மா எல்லாம் மறையுமே விண்டு
தேவர் தொழநின்ற திருடாழ் நல்லூரைப்
பாவுதல் நல்லோர் பணி 49

பணிந்தேன் திருவடியைப் பைங்குவளை கொண்டு
அணிந்தேன் திருமுடியில் அன்பாய் துணிந்தே
புரிந்தேனுன் திருநடனம் போதுகுவி நல்லூரில்
இருந்தேன் வாழ்த்தேத்த இன்று. 50

இருவாலை பொன்முலையா ருடனிருந்த முருகற்குத்
திருவான அபிடேகம் செய்யுநீர் — உருவோடி
நல்லூர்க் கழுநீர் புதுக்கொழுந்து பூங்கமுகின்
எல்லை தடவுமா மினிது. 51

இனியவ னைக் காண விரவுபகல் தொண்டர்
கனிச்சூதம் பூவிறைக்கும் நல்லூர் - இனிதோடிப்
பாலும் பழமும் பாகும் செந்தேனும்
நாலும் கொடுப்பர் நபந்து. 52

நயந்துதிரு நல்லூரில் நான்மறைக ளோத
வியந்து வருமடியார் வேண்டி - இயைந்து
தொழுதேற் றித்துதிக்கத் தூயனாம் முருகனென
வழுவிலா துரைக்கும் வேதம். 53

வேதத்தி னுட்பொருளான் விண்ணவர்தம் மெய்ப்
[பொருளான்
பாதந் தொழுவார்க்குப் பரிசளிப்பான் - போதம்
அடைவார்க் கணிகலனா மாறுமுக னென்றும்
அடைவாரை அறிவா னாய்ந்து. 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்ந்து கொண்டாதிப் பெருமானம் முருகனை
வாய்த்த மனத்திருந்தும் வல்லார்கள் ஏய்ந்ததம்
மெய்குந்தம் நீக்க முயன்றால் தாமுந்தம்
உய்குன்றம் காண்பார் உணர்ந்து. 55

உணர்ந்தடையின் வேலொருநாள் உள்ளம் படிய
அணங்கவரு துன்பங்கள் அழிய - விணங்கி
வருநல்லூ ராளா வெம்முள்ளம் புகுந்தாய்
திருநல்லூர் சிறக்கச் சென்று. 56

சென்று வணங்குமினே சீர்பெருகு நல்லூரை
நின்றுவினை கெடுப்பான் நெடுவேலன் என்றும்
கடிகமலத் தானுங் கண்மூன் றுடையானும்
அடிக்கமல மேத்து மகம். 57

மங்குல்தோய் மாடமணி மண்டபத் தானை
கங்குல் புகுவாரும் காப்பணிவார் திங்கள்
முடியேறு வசனும் முகுந்தனும் முன்னவனும்
அடியேறி நிற்பா ரணைந்து. 58

படைப்புய ராற்றற் பரமனின் பாதி
விடையேறு பாகனள் விமலை - மடியினில்
தவழு மறுமுகச் செவ்வேளைக் காணத்
திருவருள் நல்லூர் திரி. 59

திணைப்புன நங்கையில் திகைத்து வருந்தி
வனப்புற மாமை வளரக் - கனவில்
அண்ணன் துணையுடனே யானவளை வேட்டாய்
எண்ணும் பொழுதிது என். 60

எம்மண்ணி லெப்மை எடுத்தெறிந்து தீர்ப்பார்
இம்மண்ணிற் குரியரோ ஈங்கு - எம்மண்ணைக்
காக்க முனைந்த கழல்வீரர் தம்முடனே
ஆக்க அருள்தருவா யறிந்து 61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தே யுனதுநல் லூர் அடைந்தார் காவீரர்
வெறிகளம் நோக்கி விரைந்தார் - விறலுடைச்
சுடுகலனைத் தூக்கினார் துடிதுதுவிழ மாற்றாரைப்
படுகளத்துப் படுத்தினார் பணித்து. 62

பண்ணவர் பாராட்டும் மாப்பாண பெருங்குலத்தார்
விண்ணவரின் குலங்காத்த வேலனுக்கே - மண்புகழும்
நல்லூர் பெரும்பதியில் நாட்டினார் பெருங்கோயில்
எல்லோரும் ஏற்றித் தொழ. 63

தொழுந்தொண்டர் அடிப்பொடி தொட்டுமகிழ் வேலன்
அழுந்தொண்டர்க் கிரங்கி அருள்வான் - எழுவானில்
அவன்பூசை காண வடைமின்காள் நல்லூர்
பவன்நோக்குதி தம்மேற் பட. 64

படைத்தமுனி யகத்தியற்குப் பைந்தமிழி னிலக்கணத்தைக்
கடைந்து கொடுத்த கழல்முருகன் - அடைந்த
நல்லூரைக் காண நாடுங்கள் மனிதர்களே
எல்லாருய் ஏத்த வினிது. 65

இனியவனை யென்கருணை வள்ளலை இந்நாயேன்
கனிந்த மனத்திருத்திக் காண - இனித்துணை
நல்லூரா னென்று நாடினேன் நற்பேறு
கல்மலை போல்வளரக் கண்டு. 66

கம்ப னளித்த காவியமாம் இராம கதை
வம்புகளை யள்ளி வழங்குநரும் - செம்புலமாம்
நல்லூரிற் கோட்டம் நலமறிந்தே யமைந்தார்
பல்லோரும் கந்தற்குப் பணிந்து. 67

துணைவருவாய் நாயகமே தூயமயில் வாரணமும்
இணைந்து வருவேலும் எனைக்காக்க - பணைந்துவரு
துன்பங்க ளோட துரிதவருள் செழிப்ப
இன்பமே ரின்பமதாய்த் தா. 68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவுமயி லேறுஞ் சண்முகனே சடாச்சரனே
வாவுமிரு கன்னியர்கள் வாசவனே - மேவிவரு
மாமன்கதை சொல்லும் வல்லுனர்கள் வாய்த்தமிழை
ஆர்வமுடன் சுவைப்பாய் ஆங்கு. 69

அரும்ப தொடையணிந்து அன்பென்னு மலரிட்டு
வரம்புதிராச் செந்தமிழை வளையாக்கி - இரங்குந்
தந்தி இசைமீட்டி நல்லியற்பா தந்தேன்
சந்தி முழங்கவே தான். 70

தானொருவ னாகித் தனிவேல் கைக்கொண்டு
மான்புரையும் வேலான மங்கையை - மோகமுடன்
புனத்தி லுரையாடிப் புழைக்கை யானுதவ
மனத்தி லிருந்திலனே மலர்ந்து. 71

மலர்ந்த பூக்கொண்டு மனமுருகி மயங்கி
அலர்ந்த அருள்முகந் தாவென்று - கலங்கு
மடியேனைக் காத்தருள வந்த செவ்வேள்
அடிவருடி நின்றேனே யின்று. 72

இன்றே கழல்கண்டே னேழ்பிறப்பு மோட
பொன்தோய் வரைமார்பைப் புல்லினேன் - அன்று
திருவருளைக் கண்டு தெளிந்தேன் தேடரிய
முருகபுகழ் பற்றியதென் மனம். 73

மனத்துள்ளான் நல்லூரான் மாகடம்ப னென்றும்
நினைத்தவற்றை யெல்லாம் நிறைப்பான் - அனைத்துலகும்
போற்ற நின்றாடுவான் போர்க்களத்தில் முருகன்
ஏற்றவழி யமைப்பான் இசைந்து. 74

இருந்தன் கடம்பத் திருமலரி னுள்ளே
மருந்தாயி ருக்கும் மால்மருகா - அருந்தவுணை
வல்வினைக ளோடும் வந்தபிணி யுதிரும்
எல்லையிலா வின்ப மெழும். 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கதியே ஏறுகைப்பா னிளமைந்தா
சங்கம் வளர்த்த தமிழ்முதலே வா - பொங்குபுகழ்
நங்கையுமை பதியீந்த மறைக ளனைத்தும்
தங்குமன மெமக்குத் தா. 76

தாவடிக்கொக் குவிலில் தனித்திரு வாலையுடன்
மேவிவர வுடுவிலான் மேலசைய - மாஞ்சோலை
நல்லூர்ப் பெருங்கோயில் மாவீதி நகருமையன்
புல்லு மடியாரைப் புகழ். 77

புகழ்வேனென் பொன்தமிழால் பூக்கடம்ப மாலை
இகழாயென் மடநெஞ்சே ஈங்கிதனை - திகழ்வாரி
நீரும் மலையும் நீள்விசும்பும் காற்றும்
ஊரும் உயிருமேற் றான். 78

ஏற்றானிவ் வெளியேனை எங்கிருந்தோ வந்து
நீற்றால் தடவிநிழல் காட்டிக் - கூற்றுவனை
இதுவரையு மிவனைத் தீண்டாதே என்றானை
எதுவரையிற் காண்பே னினி. 79

இடரார் படுவார் எழுமனமே என்னையன்
தொடரநீ பாடுவாய் உனதுதியை - படரும்
பைந்தமிழைக் கேட்கும் பசுமைநிலை தந்தே
வந்திக்க வருவான் வணங்கு. 80

வணங்கி யுன்னைத் தொழுவார் வழுவா
திணங்கு மெய்யடிய ரேயாவர் - மனமே
விண்கொடுத்துக் கண்ணெடுத்து மண்ணளந்த சீரான்
நன்மருகன் தன்னையே நாடு. 81

நாளும் பொழுதும் நாயேன் நினைத்தழவே
ஆளும் பொழுதிலையே என்செய்வேன் - கோளும்
பற்றி நின்றென்னைப் படுபாசத் துள்இழுக்க
ஏற்றுக்கே இவ்வாழ்வு ஈங்கு. 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றுபொரு கோபுரமும் கொடியாடு மாடமும்
நின்று நிழல்காட்டும் நல்லை என்றும்
சந்து விரையும் சவ்வாதின் பெருமணமும்
வந்துமல ரலர்த்தும் மாண்பு. 83

மாபொன் முடியானை மங்காத பேரானை
மாவேற் கூரானை மனம்நெகிழ - மாதவத்தாள்
மாதாய் தாவாக வைத்தேனென் னுள்ளத்தே
மாமுருகன் காக்க வினி. 84

இனிநின்று நின்பெருமை யானுரைப்ப தென்னே
தனிநின்ற சங்கரா மூர்த்தி - பனிநீர்
தலையுலவு செஞ்சடையான் விதித்தே நான்கு
தலையானைத் தலைவணங்கச் செய்து. 85

செய்த தவத்தினால் செவ்வேள் மாக்கதையை
உய்யு முலக முவக்கவே - ஐயனே
கச்சியப்பர் காட்டினார் கருணை பொழியும்
உச்சிக் கந்தபுராணம். 86

புராண வழிகேட்கும் புண்ணியர்கள் நல்லூரில்
தருணத்தே நின்று தலைவணங்கத் தாவாரன்
வெற்றி வேலுடையான் விளையாடுமாக் கதையைப்
பற்றுற்றோர் படனமாய்க்கேட் பார். 87

பாரிற் றமிழுணர்வும் பற்றுமை யுன்னன்பும்
வாரிக் கவியை வளமாக்க - வித்தத்தறிஞர்
போற்றிப் புகழப் பொன்வேலோய் நல்லூரில்
ஏற்றி யருள்வா யெழில். 88

எழிலாரும் பேரொளியே ஏற்றமுனிக் கோர்மருந்தே
பழிசாரா ஞானிகட்குப் பதப்பொருளே - செழிப்பான
முத்தமிழின் காவலனே முதுநல்லூர் வேலவனே
எந்தனுக் கேனிந்த விதி. 89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியமைந்து நாடி வியந்தெழுந்த சிந்தை
மதியுரிஞ்சும் வான்முகடு பார்த்து - கதிர்மிகுந்த
கொம்பேற ஓடும் கொழுந்ததே போன்றதே
அம்முருகு நல்லூர் மனம். 90

மனத்துள்ளான் நல்லூரான் மால்மருகன் என்றும்
நினைப்பவர்க்கே நீள்வேல் காட்டுவான் அனைத்துயிருந்
தேவாதி தேவன்நீ என்னும் முன்னொருகால்
மாவைப் பிளந்த மகன். 91

மகனே சிவனியற்கை மருகனைந்த முருகே
இகத்துள் முருகனென இட்டார் - அகத்துள்
வைத்தாண்டார் வணங்கினார் வரம்பெற்றார் அடியார்
பைப்பாந்தள் சூடினார் பாலன். 92

பாலன் திருப்பதியாம் பசுஞ்சோலை நல்லூரில்
கலாயுதக் கொடியோன் கண்விழித்தான் - சாலச்
சிறப்புடைய தமிழீழம் செழிப்ப நம்மைமேல்
பரப்புடைய சிங்கர் படை. 93

படையாழும் மாவீரர் பாலன் முருகனுடன்
தொடைபூட்டி யேந்துந் தூவயிலால் - மிடைந்து
குலமழியச் சிங்கக் கொடியழியப் பார்த்திருப்பார்
பலமழியாச் செந்தமிழர் பணிந்து 94

பண்டைப் பெரும்பதியாம் பாருரைக்கும் நல்லை
தெகண்டிங்கு வாழுங் குமரேசன் எண்டிசையும்
கூறாக வேல்விட்டுக் குண்டர்களைத் தேய்ப்பான்
மாறாகத் தமிழர்மேல் மாசு. 95

மாலை தொடுத்துப் பாதமல ரணிந்து
காலை தொழுதெழுமின் கைகோலி - ஞாலம்
அடங்கும் வைவேல் அடலேறு கந்தன்
மடக்கித் தமிழீழம் தர. 96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமில்லாப் போரைத் தரமென்று சொல்லி
உரமில்லா ஊனர்மேல் உரைக்கின்றார் - செருமுகத்து
முருகா அறியாயோ முதுதமிழர் படும்பாடு
ஒருநாள் உயிர்காப்பா யுவந்து. 97

உவந்து உனைத்தொழுது உய்யவே யடியேன்
இவர்ந்திங் கேயினனும் இருக்கின்றேன் - நகர்ந்து
வருநாட்களோ கொஞ்சம் வல்லமையும் கெட்டேன்
இருக்கின்றா யென்னோ டிரு. 98

இருப்பு னைங்கொண்ட ஈனன் கவியால்
பொருப்புருவு வேலோனைப் போற்றினேன் - மருப்புருவு
அண்ணன் அருகிருப்பான் ஆனதினா லடியேன்
எண்ணமெல்லாம் நல்லூர் எழும். 99

என்றும் மறந்தறியே னென்னெஞ்சத் தேவைத்து
நின்று மிருந்தும் நெடுவேலை - என்றும்
நல்லையிலே கண்டு நாவுக்கரு ளேற்றி
நல்லையிலே பெற்றேன் நயம். 100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

வேழ மாமுக வேந்தனை விண்ணவர்
வாழ்த்தி வணங்கும் வள்ளை பங்கனை
ஆழ அறிவிலி ஆக்கிய நல்லையில்
ஆள்பவ நந்தாதி ஆட்சியை வேண்டினேன் 1

நல்லைச் சுடரே நம்பினேன் நாயகனே
எல்லையிலா இன்பம் ஈவோனே - முல்லை
முறுக்கவிழ்ந்த பூச்சூட்டி முன்னைவினை களைந்தேன்
இறுக்கிப் பிடித்தே னிருதாள். 2

மூப்பு மறந்தேன் முருகனே யென்றிருப்பேன்
ஆப்பு அழிய அரற்றுவேன் - நாப்பண்
நல்லூரி லுன்னடிக்கீழ் நானிருப்பேன் நச்சி
எல்லாரும் பார்த்து இனிப்ப. 3

செவிக்கின்ப மாவதுஞ் செவ்வேள் மாக்கதை
புவிக்கு மதுவே புண்ணியமாம் - கவிக்கு
மனுநீதி நிறைபொருளாய் வைத்தார் கச்சியப்பர்
தனது நிதிகாட்டும் தற்பு. 4

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழன்னை ஈன்ற செந்தமிழ் மக்களே
செந்தமிழ்ழ அளவைக்கிழார் தரும்

# செந்தமிழ்மதி

—o—

இது நல்லூர் முருகனது அந்தாதித் தோத்திரப் பாடல்களுடன் இணைந்துவரும் ஒரு சிற்றுரை விளக்கத்திற்குரியது. விளிப்புக்குரியது

நம்மைப் பெற்றெடுத்து, ஆவன எல்லாம் செய்து பரிவுடனும், பண்புடனும் காத்து வளர்த்த அன்னையினுமினிய தமிழன்னையே! உனது வாட்டம் கண்டு நெஞ்சம் பொறாது கொதித்து வருந்தி, எழுந்த ஆன்ம சக்தி செந்தமிழ் இளைஞர்களை நங்கையர்களை விளித்து அடியேனை எழுதத் தூண்டிற்று. இது எம் அன்னை தமிழ்த் தேவியின் கூற்று.

அறிக; நெறிநின்ற மொழி தமிழ்மொழி, கற்றோர் வியக்கும் மொழி, காலங்காலமறியாத மொழி, சிவமொழி, தவமொழி, அறமொழி, தமிழர் நாவிலூறும் மொழி, இனிமை மொழி, இயல்பு மொழி, உருக்கு மொழி, உணர்வு மொழி, எம்மொழிக்கும் இல்லாத அற்புதங்களை அதிசயிக்கத்தக்க ஆதாரங்களைக் கொண்ட மொழி. அம் மொழியில் அரிய பெரிய சங்க நூல்களிலும் பத்துக் காப்பியங்களிலும் பல திற ஆய்வு நூல்களிலும் பிற மொழி இலக்கிய பனுவல் களிலும் ''நுண்மாண் நுழைபுலம்'' போய் பெரும் தமிழ்ப் புலமை வாய்ந்த நலியல் வல்லாரோடு ஊறி ஆராய்ந்து அறிந்தபோது அந்நூல்கள் மாட்டு மலியக் காணும் அறிவியலுக்கான தமிழர் நாகரிகத்திற்கான, வாழ்வுக்கான வளம் மிக்க விழுமிய அரிய கருத்துக்களும், தமிழ்ப்புலவர், பேரறிஞர், நாவலர் என்பாரின் விழுப்பம் மிக்க உட்பொருளுணர்வு ஊற்

றுக்களும் உரைகளும் அளப்பரிய இன்பத்தை அகத்தும் புறத்தும் ஆர்வப்பாட்டுடன் எமக்குத் தந்தன.

காலங்காலமாக வறுமைக்குள் வாடி செம்மையாய் வாழ்ந்து நிலை தளராது "கற்றது கைம் மண்ணள வாக" தமிழன்னையின் அடித்தளம் தழுவிக் களித்து பெற்ற இன்பச் சுவையில் இருந்து தமிழ்மொழி, தமிழர் தமிழகம் எங்கள் சொத்து என்பதைக் கண்டோம்.

இப்பெரும் ஆற்றல் அமைப்புக்கள் எம்மைத்தட்டி யெழுப்பின. நின்றும் இருந்தும் நடந்தும் எத்தொழில் புரியினும் எம் நினைவுகள் முப்பெரும் அமைப்பு மாட்டுத் தோய்ந்து தோய்ந்து எழுவதாயிற்று. இம் மூன்றற்கும் வந்த தாழ்வுகண்டு எம்முள்ளம் உலை யெனக் கொதிக்கிறது. கொதித்துக் கொண்டேயிருக் கிறது.

என்னே! அன்று அரியணை அமர்ந்து ஆண்மை யுடன் ஆணை நடாத்தி அறம் ஓம்பிய அரிய எம் தமிழன்னை அவள் பெற்ற தமிழினம் தங்கிய தமிழ் மண் தமக்குரிய பொலிவு புகழ் பூரிப்பத்தனையும் இழந்து அடிமையாய் வாழத் தமிழ்ப் பெருங் குடிக ளாகிய நாம் எற்றுக்கு இங்கு வாழவேண்டும். நெஞ்சு ரமின்றி வாய்ப்பேச்சில் வீரம் காட்டுவதால் என்ன விளையப் போகிறது? காலத்தில் நாமும் சிந்தித்தோம். காலம் அமையவில்லை. சிந்திக்கச் சிந்திக்கக் காலமும் ஓடிவிட்டது. சிந்தனையின் மேல் தெளிவடையகாலம் எமது இளைஞர் கையில் ஈற்று முடிவாம். இருசுடர் வீழினும் அஞ்சாது உயிர் உள்ளளவும் தமிழ்த்தாயைக் காத்து தமிழினத்தை ஏத்தி தமிழ் மண்ணை எல்லை கண்டு தமிழர் நலம் பேணுவோம். தமிழன்னைக்கு அழிவிலாத நல்லரண் காணுவோம் என்ற உறுதிப்பாட்டுடன் மாபெரும் பணியைச் செய்ய ஒரு மாவீரன் தலைமையின் கீழ் கூடிவிட்டார்கள் மாவீர இளைஞர்கள். அவர்கள் பணி நடக்கட்டும். பாவ ஆட்சியைத் தகர்க்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மேலும் ஆற்றல் பெற்ற இளைஞர்கள் அணைந்து அறப்போராடி தமிழனையும் தமிழ் மண்ணையும் தமிழரையும் ஆட்சி பீடம் ஏற வைப் பார்கள் என்ற உறுதி உண்மை. இந்த அளவைக் கிழாரின் சிந்தனை ஆட்சி ஆகும்.

தமிழன் ஆளுமை கண்டே அகல்வேன். தமிழனை ஆட்சி கண்டே அகல்வேன். தமிழன் தமிழனாக வாழ் வது கண்டு பூரிப்பேன். இது ஆசியுரை. நிறைவேறப் பாட்டுடைத்தலைவனாகிய குமரவேள் வேல்கொண்டு விளையாடி வெற்றி காண்பான்.

நம் முந்தைப் புலவர்கள் நாவீறு பெற்ற நல்லி சைப் புலவர்கள். தமிழிலக்கியங்களை ஆக்கும் பொழு தும் தம் உள்ளத்திலுள்ள குறிப்பை வெளிப்படுத்தும் பொழுதும் கற்பனைத் திறங்களும் சொல்நயம், பொருள் நயம், இன்பரசம் யாவும் ஒருங்கே செழுமு மாறு புனைந்து கற்போரை கற்றாரை, தம்வயம் ஈர்த்து இன்பத்தை ஈர்த்து அன்பும் அருளும் பிறக்க நல்லொழுக்கப் பண்பை நாட்டும் பெற்றியர் ஆயினார்.

புலமைப் பெருமக்கள் தாம் ஆக்கிய காப்பியங் களில் அறவுரைகளும் வாழ்வுக்குயர்ந்த அறிவுரை களும் அவற்றை உய்த்துணர இடையிடை கிளைக் கதைகளும் பொதிந்து வைத்தனர். அவை கற்றார் நெஞ்சைக் கரைக்கும் பெற்றிமை மிக்கதாய் திகழு கின்றன.

பாரதம், இராமாயணம், மணிமேகலை, சிலப்பதி காரம், சங்கநூற் தொகுதிகள், சிந்தாமணி, பெருங் கதை பின்வந்த நூற்படைகள், எல்லாம் காலம் வரு முன் காலத்திலே தூக்கி எறியப்பட்டன. ஆங்கில மோகம் அந்நியர் ஆட்சி உழைத்து ஊன்வளர் குடித் திற்கு உருவேற்றிய காலம் கலையை மறந்து, மொழியை மறந்து அறம் மறைய அறிவு மறைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்மையும் மறைந்தது பெண்மை அடங்கியது. ஏன் நல்லெழுல் வாய்ந்த இத் தமிழன் செய்த வினை தமிழினம் தன்னை யார் என்பதை மறந்துவிட்டது.

காலமொன்று வரும், அக்காலம் தமிழர் வீறு புலப்படும். அதற்கென ஒருவன் வருவான். தேவர்கள் இடர்பட்டபோது நரகர்களைக் கொல்ல ஒருவன் அவதரித்தான். அதேபோல தமிழர்களின் இடர்ப்பாட்டை நீக்க ஒரு தமிழன் வந்துவிட்டான்.

காலமொன்று வருகிறது. அதுவரையும் யானும் உடனிருந்து பார்ப்பேன் என்ற நப்பெண்ணம் நாற்பது ஆண்டுகளுக்கு முன் அடியேன் நெஞ்சில் திங்கள் மண்டலத்திருந்து வெள்ளிக் குடத்தில் தீம்பால் சொரிவதுபோல தீப் படிந்தது. எப்பொழுது வருமோ எம் தீந்தமிழ்க் காவியங்கள் தெருவிலே. ஒவ்வொரு தமிழன் வாயிலிருந்தும் தீந்தமிழ் ஓசை ஓடுமோ என்று நினைக்கும்படி காலம் வந்துகொண்டிருக்கிறது

தமிழன் ஆட்சியை அமைக்க ஒருவன் உதிப்பான். அவனால் இது ஆகும். பழைய தெய்வ சரித்திரங்கள் இதற்குச் சான்று. பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்களிலும் இதற்குச் சான்றுகள் பல. உதித்த தலைவனால் தமிழன்னை அரியணை ஏறுவாள் தமிழினம் தலை நிமிரும் மகிழும். காவிய ஓசை கரைபுரண்டோடும். ஈழத் தமிழகம் எங்கு பார்த்தாலும் தமிழ்ப் பேச்சு, தமிழ் உரை, தெய்வப்பற்று, இன மலர்ச்சி காணக் காணக் கண் மலரும். நெஞ்சம் இனிக்கும். நேர்மை முடிவாழும்

ஆனந்தம்! அருவருப்பில்லா ஆனந்தம்! பிறநாட்டார் ஈழத் தமிழகத்தை அறிவார். பிறநாட்டு ஆவணங்கள், விஞ்ஞான வெளிப்புரைகள்' ஈழத் தமிழகத்தில் நடைபோடத் தொடங்கிவிடும், மொழிபெயர்ப்பு. சிறந்த தமிழ்ச் சஞ்சிகைகள், சீரான தமிழ்மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கங்கள், அறிவுரைகள், புலம்பாடு மிக்க புரட்சி கவிதைகள், இறைவணக்கத்திற்குரிய இணையற்ற செம் மொழித் தீந்தமிழ்த் தோத்திரப் பாக்கள் எல்லாம் ஆகும்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ்மொழி யில் பெயர்த்தல், இறவாத புகழுடைய பிறநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல்" இது கவிஞன் பாரதி சொன்ன பைந்தமிழ். இன்று நனவாகின்றது. உதார ணமாக தீவிர இளைஞர் ஆக்கமாகிய "உலக உலா" சிறந்தது. ஆட்சிபீடத்தை அமைக்க வழிகோலுகின்றது புலமை மிக்க பன்மொழிஞானர் அமைத்துக்கொடுக்க ஆக்கபூர்வ விஞ்ஞான இலக்கிய ஏடாக வெளிவரு கின்றது. படித்துச்சுவைப்போருக்கு பல்லறிவு ஊட்டும் இதழ். தமிழ் இளைஞர் இயக்கத்தின் புதையல். அள்ளி அள்ளித் தெவிக்க அழகு தமிழ் வளரும்.

கல்வியின் ஆட்சி கற்றோர் வசமும் கலைஞர்களி டமிருந்து தான் வெளிவந்து, பின்வரும் பரம்பரையி னரிடம் தட்டுமுட்டின்றி வளர வேண்டும். இதற்கே நம் நாடும் எம் மொழியும் நம் குலமும் ஒன்றுபட்டு ஒன்றென வாழவேண்டும். அப்பொழுது நம் நாட்டை யார் அபகரிக்க முடியும். யார் அடக்க முடியும். யார் தாக்கமுடியும். யார் தாங்க முடியும். தமிழ்மண், ஈழ மண் ஒன்றுபட்ட மண்ணென்று தரணியில் பரவி தலை நிமிர்ந்து தனித்து வளரும் காலம் தூரம் இல்லை. தமிழீழம் எங்கள் தாயகம். தமிழீழ நோக்கு தமிழர் தாயகம். தமிழர் ஆட்சி தமிழர் மாட்சி. தமிழா, விழித்திரு. தமிழீழம் காண்போம். இது இளவைக் கிழவனாரின் ஆசியும் ஆற்றல் உரையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org